Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 37
கதிர் : 239

சனிக்கிழமை
23 ஜூலை 2022

ஆடி 07 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2053

பக்கங்கள்: 12
விலை : ரூ. 50

## கிணற்றுக்குள் தவறி வீழ்ந்து முதியவர் பலி

யாழ்ப்பாணம், ஜூலை 23
கிணற்றில் குளிக்கும் போது தவறி வீழ்ந்ததில், முதியவர் ஒருவர் உயிரிழந்தார். இந்தச் சம்பவம் நுணாவில் மேற்கில் நேற்று இடம் பெற்றது. 11 ➤

# ரணிலின் அமைச்சரவை நேற்றுப் பதவியேற்றது!

- பிரதமரானார் தினேஷ் குணவர்தன
- தோல்வி முகங்களுக்கே மீண்டும் இடம்
- ஓரங்கட்டப்பட்டார் ஜி.எல். பீரிஸ்
- அலி சப்ரிக்கு வெளிவிவகார அமைச்சு



**கொழும்பு, ஜூலை 23**

**ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான புதிய அமைச்சரவை நேற்றுப் பதவியேற்றது. எதிர்பார்க்கப்பட்டதைப்போன்று தினேஷ் குணவர்தன பிரதமராகப் பதவியேற்றார். அவரைத் தொடர்ந்து 18 பேரைக் கொண்ட அமைச்சரவை பதவியேற்றது.** 11 ➤

## சுழிபுரம் புளியந்துறை காட்டுப் பகுதிக்குத் தீ!

விஷமிகள் கைவரிசை



கொழும்பு, ஜூலை 23
வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சுழிபுரம் புளியந்துறை காட்டுப்பகுதி விஷமிகளால் நேற்றுத் தீக்கிரையாக்கப்பட்டுள்ளது.
சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது: சுழிபுரம் புளியந்துறை கடற்கரை பகுதியில் 11 ➤

## மர்மப்பொருள் வெடித்து காவலாளியின் கை சிதைவு

கிளிநொச்சி, ஜூலை 23
பளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இந்திராபுரம் மனிதாபிமான கண்ணிவெடி அகற்றும் நிறுவனத்துக்குச்சொந்தமான பகுதியில் மர்மப் பொருளொன்று வெடித்ததில் 20 வயதுடைய காவலாளி ஒருவரின் கை சிதைவடைந்தது.
நேற்று நண்பகல் இந்தச் சம்பவம் இடம்பெற்றது. 11 ➤

## ரணிலை வாழ்த்தாத பைடனும் மோடியும்!

கொழும்பு, ஜூலை 23
ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க பதவியேற்றுள்ள நிலையில், ரணிலுடன் கடந்த காலத்தில் மிகவும் நெருக்கமாகப் பணியாற்றிய நாடுகளான இந்தியா மற்றும் அமெரிக்காவின் தலைவர்கள் அவருக்கு வாழ்த்துத் தெரிவிக்க 11 ➤

## போராட்டக்காரர்கள் மீது படையினர் மூர்க்கத் தாக்குதல்



கொழும்பு - காலிமுகத்திடலில் கடந்த 100 நாள்களுக்கும் மேலாக அமைதியான முறையில் போராட்டம் மேற்கொண்டவர்கள் மீது முப்படையினருக்கும் முழுமையான அதிகாரங்கள் வழங்கப்பட்டு நேற்றுமுன்தினம் நள்ளிரவு மூர்க்கமான தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. (தொடர்புடைய செய்திகள், படங்கள்: பக்கம் 2, 3,4,5)

### எரிபொருளைப் பெறுவதற்கு

## வாகன இலக்கத்தகட்டை மாற்றினால் நடவடிக்கை

கொழும்பு, ஜூலை 23
வாகன இலக்கத்தகடுகளை மாற்றி எரிபொருள் பெறுவோருக்கு 20 ஆயிரம் ரூபா தண்டம் அல்லது மூன்று மாத சிறைத்தண்டனை விதிக்கப்படும் எனப் பொலிஸார் எச்சரித்துள்ளனர். சீரான எரிபொருள் விநியோகத்தைக் கருத்திற்கொண்டு, 11 ➤

## எரிபொருள் அட்டைக்கு காத்திருந்தவர் இறப்பு!

ஊர்காவற்றுறையில் துயரம்

யாழ்ப்பாணம், ஜூலை 23
எரிபொருள் அட்டையைப் பெறுவதற்காக வரிசையில் காத்திருந்த குடும்பத்தலைவர் மயங்கி வீழ்ந்து உயிரிழந்தார். இந்தச் சம்பவம் ஊர்காவற்றுறை பிரதேச செயலகத்தில் நேற்று இடம் பெற்றது. 11 ➤

### அரசாங்கத்தை கண்டித்து

## 2 கடற்படை அதிகாரிகள் பணியிலிருந்து விலகல்!

கொழும்பு, ஜூலை 23
காலிமுகத்திடல் போராட்டக்காரர் மீது நடத்தப்பட்ட தாக்குதலை அடுத்து, கடற்படையின் இளம் இரண்டு அதிகாரிகள் பதவி விலக முடிவெடுத்துள்ளனர்.
ஜனித் ராஜகருணா மற்றும் மல்ஷான் பிரதாபசிங்க ஆகிய இரு இளம் கடற்படை அதிகாரிகளே கடற்படையில் இருந்து விலகுவதற்குத் தீர்மானித்துள்ளனர். 'யாருடைய செல்ல நாயாகவும் இருப்பதற்காகக் கடற்படையில் இணையவில்லை' என்று அவர்கள் தெரிவித்துள்ளனர். (ம)

## மண்ணெண்ணெய் விநியோகத்தை சீர்ப்படுத்துங்கள்

யாழ்ப்பாணம், ஜூலை 23
வடக்கு மாகாணத்துக்கு மண்ணெண்ணெய் நீண்ட 11 ➤

## காலிமுகத்திடல் தாக்குதல்; கோட்டையில் ஆர்ப்பாட்டம்

கொழும்பு, ஜூலை 23
காலிமுகத்திடலில் போராட்டத்தில் ஈடுபட்டோர் தாக்கப்பட்டமையைக் கண்டித்து, கோட்டை ரயில் நிலையத்துக்கு முன்பாக நேற்று அமைதியான முறையில் ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.
காலிமுகத்திடலில் போராட்டத்தில் ஈடுபட்டோர் மீது நேற்றுமுன்தினம் பின்னிரவு அரச படைகள் 11 ➤

### யாழ்ப்பாணத்தில் இன்று

## அரச அராஜகத்தை எதிர்த்துப் போராட்டம்

கொழும்பு, ஜூலை 23
காலிமுகத்திடலில் இடம்பெற்ற தாக்குதலுக்கு எதிர்ப்புத் தெரிவித்து யாழ்ப்பாணத்தில் இன்றையதினம் கண்டனப் போராட்டத்துக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. 11 ➤

# ராஜபக்ச நிழல் அரசின் கொடூரமான தாக்குதல்!

தாக்குதல்களுக்கு எதிர்க்கட்சித் தலைவர் கண்டனம்

கொழும்பு, ஜூலை 23
காலிமுகத்திடலில் போராட்டத்தில் ஈடுபட்டோர் மீது, நேற்றுமுன்தினம் பின்னிரவு நடத்தப்பட்ட தாக்குதல், 'ராஜபக்ச நிழல் அரசாங்கத்தால் நடத்தப்பட்ட தாக்குதலே' என்று தெரிவித்தார் எதிர்க்கட்சித் தலை 11 ➤

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடிப்படை உரிமைகளை மதித்துச் செயற்படுங்கள்

## காலிமுகத்திடல் தாக்குதலுக்கு நோர்வே தூதுவர் கண்டனம்

கொழும்பு, ஜூலை 23

அமைதியாக ஒன்றுகூடுவதற்கும் சுதந்திரமாகத் தமது கருத்துக்களை வெளிப்படுத்துவதற்கும் மக்களுக்கு உரிமை உண்டு. அடக்குமுறையை பயன்படுத்தி அவர்களின் உரிமை நசுக்கப்படலாகாது என நோர்வே தூதுவர் தனது ருவிற்றர் பதிவில் தெரிவித்துள்ளார்.

அவர் தனது பதிவில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:-

இலங்கை அரச அதிகாரிகள் சட்டத்தின் ஆட்சி, அடிப்படை உரிமைகளை மதித்துச் செயற்படுதல் அவசியம்.

எந்தச் சூழலிலும் அடக்குமுறையைப் பயன்படுத்துவதை நியாயப்படுத்த முடியாது. அமைதியான போராட்டக்காரர்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல்களை வன்மையாகக் கண்டிக்கிறோம்.

அமைதியாக ஒன்றுகூடவும் சுதந்திரமாகத் தமது கருத்துக்களை வெளிப்படுத்தவும் மக்களுக்கு உரிமை உண்டு - என்றுள்ளது. (ச-இ)

# போராட்டத்தைக் கலைக்க படையினருக்கு அதிகாரம்

## ஐ.நா.வின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி கவலை



**கொழும்பு, ஜூலை 23**

**படையினருக்கு அதிகாரமளிக்கப்பட்டு அடக்குமுறையைப் பயன்படுத்தி மக்கள் போராட்டத்தை கலைத்தமை கவலையளிக்கின்றது என ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான வதிவிடப்பிரதிநிதி ஹனா சிங்கர் தெரிவித்துள்ளார்.**

இதுதொடர்பில் அவர் தனது ருவிற்றர் பதிவில் மேலும் தெரிவிக்கையில்,

காலிமுகத்திடல் பகுதியில் அமைந்துள்ள ஜனாதிபதி செயலகத்துக்கு முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களை நேற்று அதிகாலை முப்படையினர் அங்கிருந்து அகற்றியுள்ளனர். போராட்டக்காரர்களை கலைக்க படையினரை பயன்படுத்தியமை கவலையளிக்கிறது. ஊடகவியலாளர்கள் மற்றும் மனித உரிமைப் பாதுகாவலர்களுக்கு ஆர்ப்பாட்டங்களைக் கண்காணிக்க உரிமை உண்டு. அவர்களின் செயற்பாட்டுக்கு தடை ஏற்படுத்தியுள்ளமை சர்வதேசத்தில் இலங்கைக்கான அவப்பெயரை ஏற்படுத்தியுள்ளது - என்றார். (ச-இ)

# வன்முறையை தவிருங்கள்!

## கனேடிய தூதரகம் வேண்டுகோள்

கொழும்பு, ஜூலை 23

காலிமுகத்திடலில் அமைதியான போராட்டத்தில் ஈடுபட்டோர் மீதான வன்முறை தவிர்க்கப்படவேண்டும் என இலங்கைக்கான கனேடிய உயர்ஸ்தானிகர் டேவிட் மெக்கின்னன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ருவிற்றர் பதிவில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

அடக்குமுறையைப் பயன்படுத்தி மக்கள் போராட்ட உரிமையை அடக்குகின்றமை தலைகுனிவான செயலாகும். இதுதொடர்பில் இலங்கை அதிகாரிகள் பொறுமையுடனும் வன்முறைகளைத் தவிர்த்தும் செயற்பட்டு மக்களின் உரிமையைப் பாதுகாக்க வழிவகை செய்யவேண்டும் - என்றார். (ச-இ)

# காலிமுகத்திடல் தாக்குதல் மூர்க்கத்தன வெளிப்பாடு!

## இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு கண்டனம்

கொழும்பு, ஜூலை 23

காலிமுகத்திடலில் அமைதிப் போராட்டம் மேற்கொண்டோர் மீது நேற்று அதிகாலை மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் புதிய அரசின் மூர்க்கத்தனத்தை படம் போட்டுக் காட்டியுள்ளது என இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு கண்டித்துள்ளது.

இதுகுறித்து மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இந்தச் செயற்பாடு மக்களின் அடிப்படை உரிமைகளை நிறைவேற்று தரப்பினர் முற்றிலும் மீறும் செயலாகும். தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடையவர்களைக் கண்டறிந்து உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

அத்துடன் படையினரின் இந்தச் செயற்பாடு எதிர்காலத்தில் இடம்பெறமாட்டாதென்பதை அரசாங்கம் உறுதி செய்யவேண்டும். சட்டத்தின் ஆட்சி பேணப்படுவதை உறுதிசெய்வதற்காக சுயாதீனமாக விசாரணைகளை இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு முன்னெடுக்கும் - என்றுள்ளது. (ச-இ)

# ஒரே இரவில் முப்படையினரின் அதிகாரத்தை பயன்படுத்தியமை கவலையளிக்கின்றது

## நியூஸிலாந்து தூதுவர் தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 23

ஒரே இரவில் முப்படையினரின் அதிகாரத்தைப் பயன்படுத்தி காலிமுகத்திடலில் அடக்குமுறை நிகழ்ந்துள்ளமை கவலையளிக்கின்றது என நியூஸிலாந்து தூதுவர் தனது ருவிற்றர் பதிவில் தெரிவித்துள்ளார்.

பேச்சு சுதந்திரம், ஊடக சுதந்திரம் மற்றும் அமைதியான போராட்டத்துக்கான உரிமை ஆகியவை அனைத்து சுதந்திரமான சமூகங்களின் அடித்தளமாகும்.

இந்த நிலையில் காலிமுகத்திடலில் அமைதியான முறையில் போராட்டம் முன்னெடுத்த போராட்டக்காரர்கள் மீது நேற்று அதிகாலை இடம்பெற்ற தாக்குதல் கவலையளிக்கின்றது என மேலும் தெரிவித்துள்ளார். (ச-இ)

# காலிமுகத்திடல் தாக்குதல் அமெரிக்காவும் கண்டனம்

கொழும்பு, ஜூலை 23

காலிமுகத்திடல் போராட்டக்காரர்கள் மீதான தாக்குதல் அநாகரிகமான செயற்பாடு என அமெரிக்க தூதர் ஜூலி சங் கவலை வெளியிட்டுள்ளார்.

அமைதியான, நியாயமான போராட்டத்தை ஆதரிக்க வேண்டும்.

நேற்று அதிகாலை போராட்டக்காரர்களுக்கு எதிராக காலிமுகத்திடலில் மேற்கொள்ளப்பட்ட செயல் குறித்து அமெரிக்கா கடும் கண்டனம் வெளிப்படுத்துகின்றது.

அத்தோடு காயமடைந்தவர்களுக்கு உடனடியாக மருத்துவ உதவி கிடைக்க வழி செய்ய வேண்டும் - என்றார். (ச-இ)

# காலிமுகத் தாக்குதல் நாட்டுக்கு கறை படிவு

## பிரிட்டன் தூதர் அதிருப்தி



கொழும்பு, ஜூலை 23

காலிமுகத்திடல் போராட்டக்களத்தில் இருந்துவரும் செய்திகள் மிகவும் கவலையளிக்கின்றன என பிரிட்டன் தூதர் சாரா ஹல்டன் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவரது ருவிற்றர் பதிவில் மேலும் உள்ளதாவது:-

அமைதியான முறையில் போராட்டம் நடத்துவதற்கான உரிமையின் முக்கியத்துவம் பேணப்படுதல் அவசியம்.

காலிமுகத்திடலில் போராட்டக்காரர்கள் மீது இராணுவத்தினரால் நடத்தப்பட்ட தாக்குதல் இலங்கைக்கு ஒரு கறையாகும் - என்றுள்ளது. (ச-இ)

# நாட்டின் எதிர்காலத்தை அடக்குமுறை பாதிக்கும்

## மைத்திரி வேதனை



கொழும்பு, ஜூலை 23

அடக்குமுறைச் செயற்பாடுகள் நாட்டின் எதிர்காலத்தை பாதிக்கும் என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தனது பேஸ்புக் பதிவில் மேலும் தெரிவித்ததாவது:-

காலிமுகத்திடல் பகுதியில் அமைந்துள்ள ஜனாதிபதி செயலகத்துக்கு முன்னால் அமைதியான போராட்டத்தில் ஈடுபட்டவர்களை நேற்று அதிகாலை முப்படையினர் மிலேச்சத்தனமாக தாக்குதல் நடத்தி அகற்றியுள்ளனர்.

காலிமுகத்திடல் போராட்டக்காரர்களுடன் கலந்துரையாடி இணக்கப்பாட்டின் மூலம் பிரச்சினைக்கு தீர்வு காண்பது சிறந்தது. அதனை விடுத்து சர்வதேசத்தின் ஒத்துழைப்பு எதிர்பார்க்கப்படும் இந்த நேரத்தில், அடக்குமுறைச் செயற்பாடுகள் நாட்டின் எதிர்காலத்தை பாதிக்கும்- என்றார். (ச-இ)

# ஊடகவியலாளர் தாக்குதல் ஜனநாயக விரோத செயல்

## சார்க் ஊடகவியலாளர் மன்றம் கண்டனம்

கொழும்பு, ஜூலை 23

ஊடகவியலாளர்கள் தாக்குதலுக்கு உள்ளாவதோ அல்லது அடக்குமுறைக்கு உள்ளாவதோ முற்றிலும் ஜனநாயகத்துக்கு விரோதமானது என சார்க் ஊடகவியலாளர் மன்றம் கண்டனம் வெளியிட்டுள்ளது.

காலிமுகத்திடலில் அமைதியான போராட்டத்தை மேற்கொண்டோரை முப்படையினர் அதிகார பலத்தைப் பயன்படுத்தி நேற்று அதிகாலை அகற்றியுள்ளனர்.

அத்துடன் செய்தி சேகரிப்பில் ஈடுபட்ட ஊடகவியலாளர்கள் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதில் அவர்கள் காயமடைந்துள்ளனர் எனத் தகவல் வெளியாகியுள்ளது.

இந்தச் செயற்பாடு நாட்டின் அடக்குமுறைச் செயற்பாட்டை உலக நியச் செய்யாது மூடிமறைப்பதற்கான அநாகரிக செயற்பாடாகும் என மேலும் கண்டித்துள்ளது. (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### முப்படையினருக்கு ரணிலால் அதிகாரமளிக்கப்பட்டு ஒருமணிநேரத்தில்

# பாதுகாப்புப் படை குவிக்கப்பட்டு 'கோத்தா கோ கம' அகற்றம்!

- ஜனாதிபதி செயலகம் படையினர் கட்டுப்பாட்டில்
- போராட்டக்காரர்களின் கூடாரங்கள் உடைத்தெறிவு
- போராட்டக்காரர்கள், ஊடகவியலாளர்கள் மீது மிலேச்சத்தனம்

கொழும்பு, ஜுலை 23

**கடந்த 100 நாள்களுக்கு மேலாக அரசாங்கத்துக்கு எதிராக கொழும்பு காலிமுகத்திடலில் அமைந்துள்ள ஜனாதிபதி செயலகத்தின் நுழைவு வாயிலை முற்றுகையிட்டு எதிர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வந்த நிலையில், பொது அமைதியைப் பேணுவதற்காக முப்படையினருக்கு அதிகாரம் வழங்கி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் அதிவிசேட வர்த்தமானி வெளியிடப்பட்டு ஒரு மணி நேரத்துக்குள் அங்கு முப்படையினரை களமிறக்கி மிகமோசமான தாக்குதல் நடத்தப்பட்டு 'கோத்தா கோ கம' போராட்டக்காரர்கள் அகற்றப்பட்டுள்ளனர்.**

இந்தச் சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது:-

முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பதவி விலகவேண்டும் என வலியுறுத்தி அரச எதிர்ப்புப் போராட்டம் காலிமுகத்திடலில் அமைதியான வழியில் 100 நாள்களைக் கடந்து மேற்கொள்ளப்பட்டு வந்தது.

இந்த நிலையில் கடந்த வாரம் 13ஆம் திகதியன்று நாட்டைவிட்டு வெளியேறிய கோத்தாபய ராஜபக்ச பதவிலகல் கடிதத்தை கையளித்தார். அதனையடுத்து கடந்த 15 ஆம் திகதி ரணில் விக்கிரமசிங்க பதில் ஜனாதிபதியாக நியமிக்கப்பட்டு 20 ஆம் திகதி நாடாளுமன்ற வாக்கெடுப்பின் மூலம் ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

**தாக்குதல் அச்சம்**

ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க தெரிவு செய்யப்பட்ட பின்னர் போராட்டக்காரர்கள் மீதான அவரது வன்மம் நிறைந்த கருத்துக்களால், அவர்கள் மீது எந்நேரமும் எதுவும் நடக்கலாம் என்ற நிலைமை காணப்பட்டது. இந்த நிலையில் போராட்டக்காரர்கள் தமது கட்டுப்பாட்டில் கைப்பற்றி வைத்திருந்த ஜனாதிபதி செயலகத்தையும் நேற்றைய தினம் காலையில் கையளிக்கத் திட்டமிட்டிருந்தனர்.

**வர்த்தமானி**

இந்தநிலையில் நாட்டின் அமைதியைப் பேணும் வகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் முப்படையினருக்கு அதிகாரம் வழங்கப்பட்டு அதிவிசேட வர்த்தமானி நேற்றுஅதிகாலை வெளியாகி ஒரு மணி நேரத்துக்குள் ஜனாதிபதி செயலகத்துக்குள்பிரவேசிக்கும்அனைத்து வீதிகளையும் முப்படையினர் தடுப்பு வேலிகளை அமைத்து மூடினர்.

அங்கிருந்து இரு முனைகளிலும் போராட்டக்களம் நோக்கி முப்படையினரும் முன்னேறினர். அதை எதிர்த்து அமைதிவழியில் போராடியவர்கள் மீது மிக மோசமாக - மிலேச்சத்தனமாக தாக்குதல் நடத்தினர். அவர்களை விரட்டி விரட்டி தாக்கிய சீருடையினர், பெண் போராட்டக்காரர்களையும் விட்டு வைக்கவில்லை.

**ஊடகவியலாளர்களும் இலக்கு**

சம்பவத்தை நேரலையாக ஒளிபரப்பிக் கொண்டிருந்த சர்வதேச ஊடகமான பி.பி.சி.யின் செய்தியாளர்கள் உட்பட உள்ளூர் செய்தியாளர்களும் படையினரின் காட்டுமிராண்டித்தனமான தாக்குதலுக்கு இலக்காகினர். அவர்களது கைப்பேசிகள் பலவந்தமாக பறிக்கப்பட்டு காணொலிகள் அழிக்கப்பட்டன.

**மருத்துவ உதவிக்கும் தடை**

காயமடைந்த போராட்டக்காரர்களை மருத்துவமனைக்கு கொண்டு செல்ல முடியாத நிலைமையும் ஏற்பட்டது. போராட்டக்களப் பகுதியைச் சுற்றி வளைத்த முப்படையினரும், வெளியிருந்து உள்ளே எவரையும் அனுமதிக்காததுடன் உள்ளிருந்து வெளிச் செல்லவும் யாரையும் அனுமதிக்கவில்லை. அதே போன்று சட்டத்தரணிகள் சிலர் மீதும் மிக மோசமான தாக்குதல் நடத்தப்பட்டது. அவர்களையும் உள்ளே செல்ல அனுமதிக்காத முப்படையினர், மிக மோசமான வார்த்தைகளால் அவர்களை ஏசிக் கலைத்தனர்.

**அடித்துடைப்பு**

போராட்டக்கிராமத்துக்குள் புகுந்த முப்படையினர் அங்கு தம் கண்ணெதிரில் தென்பட்ட அனைத்தையும் அடித்து உடைத்து நிர்மூலமாக்கி தமது வெறியைத் தீர்த்துக் கொண்டனர். போராட்டக்களம் சில மணிநேரத்தினுள் வழித்துத் துடைத்தெறியப்பட்டது.

**வெளியேற்றம்**

பாதுகாப்புத் தரப்பினரின் மிகக் கொடூரமான தாக்குதலுக்கு இலக்காகி போராட்டக்காரர்கள் வெளியேறியிருந்த நிலையில், சில மணிநேரங்களில் அந்தப் பகுதியை தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்த படையினர், அங்கு யாரும் நுழையாதவாறு பாதுகாப்பு அரண்களை அமைத்துக் கொண்டனர். (ஒ-ச இ)

## களுத்துறை 'கோத்தாகோகம' வை ஒரு மணிநேரத்துக்குள் அகற்றுக!

### பொலிஸார் எச்சரிப்பு

கொழும்பு, ஜுலை 23

களுத்துறையில் அமைக்கப்பட்டுள்ள காலிமுகத்திடல் போராட்டக்களத்தின் கிளையை ஒரு மணிநேரத்துக்குள் அகற்றுமாறு அங்குள்ள பொலிஸாரால் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

கொழும்பில் நேற்று காலிமுகத்திடல் பகுதியில் இராணுவம், பொலிஸ் விசேட அதிரடி படையினர் போராட்டப் பகுதிக்குள் பிரவேசித்து போராட்டக்காரர்கள் மீது தாக்குதல் நடத்தி வெளியேற்றியுள்ளனர்.

இந்த நிலையில் களுத்துறையில் அமைக்கப்பட்டுள்ள காலிமுகத்திடல் போராட்டக்களத்தின் கிளை ஒருமணிநேரத்துக்குள் அகற்றப்படவேண்டும் என அங்குள்ள பொலிஸாரால் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ச-இ)

## படையினரால் பிடிக்கப்பட்ட ஊடகவியலாளர்கள் எங்கே?

காலிமுகத்திடலில் நேற்று அதிகாலை படையினரால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் செய்தி சேகரிப்பில் ஈடுபட்டுக் கொண்டிருந்த இரு ஊடகவியலாளர்கள் காணாமற்போயுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

கொள்ளுப்பிட்டி கிரஸ்காட் பகுதியில் சத்துரங்க பிரதீப் குமார, கசுன் குமாரகே ஆகிய இரு ஊடகவியலாளர்களை இராணுவத்தினர் பிடித்துச் சென்றுள்ளனர். ஆயினும் அவர்கள் இதுவரை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்படவில்லை.



அதேவேளை இந்தத் தாக்குதலின்போது பிபிசி தமிழ் செய்தியாளர்கள் ஜெரைன் சாமுவேல், மணிகண்டன், ஊடகவியலாளர் ரசிக [illegible] ணிகள் [illegible] என்பது குறிப்பிடத்தக்கது. (ச-இ)

## பி.பி.சி. ஊடகவியலாளர் மீதும் காலிமுகத்திடலில் மூர்க்கத்தனம்

கொழும்பு, ஜுலை 23

காலிமுகத்திடலில் அரச எதிர்ப்புப் போராட்டக்காரர்கள் மீது நேற்று அதிகாலை முப்படையினரால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் சம்பவத்தில் பி.பி.சி. செய்தி சேவையின் ஊடகவியலாளர்களும் தாக்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

பி.பி.சி. செய்திச் சேவையின் தாக்கப்பட்ட ஊடகவியலாளர்கள் சம்பவம் தொடர்பில் விவரிக்கையில்,

காலிமுகத்திடத்திடலில் அமைதியான முறையில் ஈடுபட்ட போராட்டக்காரர்கள் மீது படையினர் தாக்குதல் மேற்கொள்ளலாம் என அறிந்த நிலையில் ஜனாதிபதி செயலகத்துக்கு செய்தி சேகரிக்கச் சென்றிருந்தோம். சில நிமிடங்களில் அங்கு ஆயுதங்களேந்திய நூற்றுக்கணக்கான படையினர் மற்றும் பொலிஸார் கலகமடக்கும் ஆயுதங்களுடன் இரண்டு திசைகளில் இருந்தும் வந்திறங்கினர். அவர்களின் முகங்கள் மூடப்பட்டிருந்தன. அவர்களுக்குப் போராட்டக்காரர்கள் தமது எதிர்ப்பை வெளியிட்ட வேளை பாதுகாப்புப் படையினர் முன்னோக்கி நகர்ந்து மூர்க்கத்தனமானவர்களாக மாறி அவர்கள் மீது தாக்குதல் நடத்தினர்.

ஓரிரு நிமிடங்களுக்குள் படையினர் சத்தமிட்டவாறு கூடாரங்களை நொருக்குவதையும் அப்பகுதியில் நடைபாதையில் காணப்பட்ட ஏனைய பொருள்களை அழிக்கும் செயற்பாட்டையும் நாங்கள் பதிவு செய்தோம்.

அதன்போது சிவில் உடை தரித்த ஒருவர் எமது சகாவைப் பார்த்து சத்தமிட்டு கையடக்க தொலைபேசியிலிருந்த காணொலிகளை அழிக்குமாறு பணித்து கைபேசியைப் பறித்தார்.

அப்போது நாங்கள் செய்தியாளர்கள். எங்கள் கடமையை செய்கின்றோம் என நாங்கள் தெரியப்படுத்திய போதிலும் அவர்கள் அதனை செவிமடுக்காது காட்டுமிராண்டித்தனமாகத் தாக்கினர்.

அத்துடன் கைபேசியிலிருந்த படங்களை அகற்றிய பின்னர் கையடக்க தொலைபேசியை திருப்பிவீசினர். பின்னர் இராணுவ அதிகாரியொருவர் தலையிட்டு நாங்கள் செல்வதற்கு அனுமதி வழங்கினார் என்று தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முப்படையினருக்கும் அதிகாரம்; வர்த்தமானி ரணிலால் வெளியீடு

கொழும்பு, ஜூலை 23

நாடு முழுவதும் பொது அமைதியைப் பேணுவதற்கான அதிகாரம் முப்படையினருக்கு வழங்கப்பட்டு அதிவிசேட வர்த்தமானி புதிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் நேற்று முன்தினம் வெளியிட்டுள்ளது. பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 12 ஆம் பிரிவால் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம் இந்த வர்த்தமானி அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. அதன்படி இராணுவத்தினர், கடற்படையினர் மற்றும் விமானப் படையினருக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. இந்தநிலையில் நேற்று அதிகாலை காலிமுகத்திடல் போராட்டக் களத்தை இராணுவத்தினர் கைப்பற்றி அங்கிருந்த போராட்டக்காரர்கள் மீது பலப்பிரயோகம் மேற்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-இ)





















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## காலிமுகத்திடலில் படையினரின் மிலேச்சத்தனம்






















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org














# எரிபொருள், எரிவாயுத் தட்டுப்பாடு; யாழில் அதிகரித்தது விறகின் விலை

யாழ்ப்பாணம், ஜுலை 23

நாட்டில் நிலவும் எரிபொருள், எரிவாயுத் தட்டுப்பாட்டால் யாழ்ப்பாணத்தில் விறகின் விலை அதிகரித்துள்ளது. சமையல் எரிவாயு, மண்ணெண்ணெய் போன்றவற்றைப் பயன்படுத்தியோர் தற்போது விறகைப் பயன்படுத்தி வருகின்றனர்.

இதனால் விறகின் விலை அதிகரித்ததோடு விறகுக்குப் பெரும் கிராக்கியும் ஏற்பட்டுள்ளது. அத்துடன் பெற்றோல், டீசல் தட்டுப்பாட்டால் தெற்கிலிருந்து கொண்டு வரப்படும் விறகுகள் தற்போது எடுத்து வரப்படுவதில்லை என்று விறகு விற்பனையாளர்கள் தெரிவித்தனர்.

இதனால் யாழில் விறகுகளின் விலை அதிகரித்ததோடு விறகுகுக்குத் தட்டுப்பாடும் ஏற்படும் என்றும் விறகு விற்பனையாளர்கள் தெரிவித்துள்ளனர். (ஓ-14-17)



## சிறுபோக நெற்செய்கை விவசாயிகளுக்கு உரம்

முல்லைத்தீவு மாவட்டத்தில் சிறுபோக நெற்செய்கையை மேற்கொண்ட விவசாயிகளுக்கு, தமிழகத்தால் வழங்கப்பட்ட யூரியா உரம் வழங்கும் நடவடிக்கை அண்மையில் முன்னெடுக்கப்பட்டது.

அதற்கமைய குமுழமுனை, பாண்டியன்குளம், உடையார்கட்டு, ஒட்டுசுட்டான் ஆகிய கமநலசேவை நிலையங்களில் கமநலசேவைத் திணைக்களத்தினரால் விவசாயிகளுக்கு உரம் வழங்கப்பட்டு வருகின்றது.

ஒரு ஏக்கர் சிறுபோக விவசாயம் மேற்கொள்ளும் விவசாயிகளுக்கு ஒரு கிலோ யூரியா 200 ரூபா வீதம் 20 கிலோ யூரியா உரம் வழங்கப்படுகின்றது.

இதேவேளை தனியார் கடைகளில் 50 கிலோ யூரியா 38 ஆயிரம் தொடக்கம் 40 ஆயிரம் வரை விற்பனை செய்யப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஓ-14-19)

## பொதுக்கூட்டம்

கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரியின் பழைய மாணவர் சங்க பொதுக் கூட்டம், நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கல்லூரியின் பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது. கூட்டத்தில் பழைய மாணவர் சங்க உறுப்புரிமை கொண்ட உறுப்பினர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-14-159)

## இன்றைய நாள் (ராசிபலன்)

**மேடம்:** வியாபாரத்தில் புதிய முயற்சிகள் பலன் தராமல் போகும். சிந்தித்து செயற்படுங்கள். எதிர்பார்ப்பு தாமதமாகும். பணியில் மட்டும் முழுமையாக கவனம் செலுத்தவும்.

**இடபம்:** வேலைப் பளு அதிகரிக்கும். திடீர்ச் செலவால் சங்கடம் ஏற்படும். கொடுக்கல் வாங்கலில் கவனம் தேவை. வழிபாடு நன்மையளிக்கும். அலைச்சல் அதிகரிக்கும்.

**மிதுனம்:** பழைய கடன்களை அடைத்து நிம்மதி காண்பீர்கள். வரவு அதிகரிக்கும். புதிய முயற்சி வெற்றியாகும். நீண்டநாள் எண்ணம் நிறைவேறும். வாகனம் வாங்குவீர்கள்.

**கடகம்:** தொழிலை விரிவு செய்யும் முயற்சியில் ஈடுபடுவீர்கள். எண்ணம் நிறைவேறும். வியாபாரத்தில் உங்கள் அணுகுமுறையால் புதிய வாடிக்கையாளர்கள் [illegible] செல்லும்.

**சிம்மம்:** குடும்ப நலனில் அக்கறை செலுத்துவீர்கள். நண்பர்களால் அனுகூலம் அடைவீர்கள். பொன் பொருள் சேர்க்கை உண்டாகும். புதிய முயற்சிகள் நிறைவேறும். மாற்றம் காண்பீர்கள்.

**கன்னி:** நிதானமாக செயற்பட வேண்டிய நாள். புதிய முயற்சிகள் வேண்டாம். எதிர்பார்ப்புகளில் தடை ஏற்படும். மனதில் இனம்புரியாத சங்கடம் தோன்றும். இடையூறுகளை சந்திப்பீர்கள்.

**துலாம்:** உங்கள் எண்ணம் எளிதாக நிறைவேறும். ஆதாயம் அதிகரிக்கும். உங்கள் திறமைகள் வெளிப்படும் நாள். நினைத்ததை அடைவீர்கள். விலகிச் சென்றவர்கள் தேடி வருவார்கள். மகிழ்ச்சியான நாள்.

**விருச்சிகம்:** நீண்டநாள் முயற்சி நிறைவேறும். போட்டியாளர்கள் விலகுவார்கள். அலுவலகத்தில் பொறுப்புகள் கூடும். உங்கள் செல்வாக்கு உயரும். நினைத்ததை நிறைவேற்றுவீர்கள். புதிய முயற்சி ஒன்றில் ஈடுபடுவீர்கள்.

**தனுசு:** உறவினர்கள் வழியில் நெருக்கடி விலகும். உங்கள் வார்த்தைக்கு மதிப்புண்டாகும். எதிர்காலத்துக்குரிய திட்டங்களைத் தீட்டுவீர்கள். சேமிப்பில் கவனம் செல்லும். சொத்து வாங்கும் முயற்சி நிறைவேறும்.

**மகரம்:** தொழிலில் கவனம் செலுத்துவீர்கள். வருமானம் அதிகரிக்கும். உழைப்புக்கேற்ற வருவாய் உண்டாகும். எதிர்ப்பை சமாளித்து வெல்வீர்கள். இழுபறிக்குப் பின் முயற்சி நிறைவேறும்.

**கும்பம்:** வியாபாரத்தில் இருந்த தடை விலகும். உங்கள் முயற்சியால் ஆதாயம் சேரும். துணிச்சலுடன் செயற்பட்டு நினைத்ததை நிறைவேற்றிக் கொள்வீர்கள்.

**மீனம்:** குடும்பத்தில் செல்வாக்கு உயரும். பண வரவில் இருந்த தடை அகலும். வேலையிடத்தில் பொறுப்பு கூடும். உங்கள் திறமைக்கு மதிப்புண்டாகும். கோயில் தரிசனம் மகிழ்ச்சி தரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## ஆடிக்கலவரம்

இலங்கையின் வரலாற்றில் மிக மோசமான கறுப்பு ஜூலை கலவரங்கள் வெடித்து இன்றுடன் 39 ஆண்டுகள் முழுமையடைகின்றன. அதேபோன்றதொரு மாதத்திலேயே மீண்டும் ஒரு கலவரத்துக்கான பிள்ளையார் சுழி போடப்படுகின்றதா என்ற அச்சமும் எழுகின்றது.

ஈழத்தமிழர்களின் அஹிம்சைவழிப் போராட்டங்கள், ஆயுதமுனையில் அடக்கப்பட்டபோது, உரிமைகளை மீட்க ஆயுதப் போராட்டமே ஒரே வழி என்று தமிழர்கள் சிந்தித்தனர். அதன் விளைவாக முகிழ்ந்த ஆயுதப் போராட்டத்தில், திருநெல்வேலியில் இராணுவத்தினரின் வாகனம் மீது தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பால் தாக்குதல் தொடுக்கப்பட்டது. அதில் 13 இராணுவத்தினர் கொல்லப்பட அவர்களது உடல்களை தென்னிலங்கைக்கு எடுத்துச் சென்று அதைவைத்து பேரினவாதத் தீயை கொழுந்துவிட்டு எரியச் செய்தது, இப்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் மாமனாரான ஜே.ஆர்.ஜெயவர்த்தனவின் அரசு.

தமிழ் மக்களுக்கு எதிராக கொம்பு சீவி விடப்பட்ட சிங்களப் பேரினவாத ஓநாய்கள், குருதியைக் குடிப்பதற்காக தென்னிலங்கை முழுவதும் அலைந்து திரிந்தன. இந்தக் கலவரம் ஒன்றும் எதேச்சையாக வெடித்தது அல்ல. ஐக்கிய தேசியக் கட்சியின் ஜே.ஆர். அரசாங்கத்தால் நன்கு திட்டமிடப்பட்டு, தமிழர்களை இனப்படுகொலை செய்வதற்காக அனைத்துத் திட்டங்களும் பாதுகாப்புப் படைகளுடன் இணைந்து வகுக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

ஆடிக் கலவரத்தால் இலங்கை அரசாங்கம் சர்வதேச சமூகத்தின் முன்னால் தலைகுனிந்தது. நாட்டில் மாறாத வடுவை ஏற்படுத்திய கறுப்பு ஜூலை கலவர நாளிலே, மாமனார் வழியில் செல்ல தலைப்பட்டுள்ளார் 'மிஸ்டர் கிளீன்' என்று சொல்லப்படும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.

இப்போதைய ஆடிக் கலவரம் சற்று வித்தியாசமானது. இது தமிழர்கள் மீதான அட்டூழியம் அல்ல. மாறாக சிங்கள மக்கள் மீதே, அரசாங்கத்தின் முப்படைகளும் இணைந்து தாக்குதல் நடத்தி காலிமுகத்திடல் அஹிம்சாவாதிகளை அடித்துக் கலைத்துள்ளனர்.

அன்று காலிமுகத்திடலில், சிங்களம் மட்டும் சட்டத்துக்கு எதிராக தமிழர்கள் அஹிம்சைப் போராட்டம் நடத்தியபோது எட்டி உதைத்த சிங்கள தேசம், இன்று தான் அத்தகையதொரு அவல நிலையை அனுபவிக்கின்றது.

ரணில் விக்கிரமசிங்க என்ற மனிதனின் சர்வதேச முகம் 'மிஸ்டர் கிளீன்'. அவர் ஒரு லிபரல்வாதி – ஜனநாயகவாதி. ஆனால் அவர் பதவியேற்று 24 மணி நேரத்துக்குள்ளேயே, மிக மோசமான இரும்பு மனிதன் என்று தன்னை அடையாளப்படுத்தியிருக்கின்றார்.

ரணிலின் ஜனாதிபதிக் கனவு என்பது மிக நீண்டது. 1999 ஆம் ஆண்டிலிருந்து போட்டியிட்டு தோற்றுப்போன ஒருவர். இப்போது பின்கதவு வழியில் அது அவருக்குக் கிட்டியிருக்கின்றது. அது இதுவரை காலமும் அவருக்குக் கிட்டாதது நன்மை என்று சிந்திக்கும் அளவுக்கு, பதவியேற்றவுடனேயே தனது கைவரிசையைக் காட்டியிருக்கின்றார்.

சர்வதேச சமூகத்தின் கண்டனங்களுக்கு உள்ளாக வேண்டி வரும் என்று தெரிந்திருந்தும், தனது 'மிஸ்டர் கிளீன்' முகத்திரை கிழியும் என அறிந்திருந்தும் படுமோசமான – கடைந்தெடுத்த காவாலித்தனமான ஒரு செயற்பாட்டை நேற்று அதிகாலை காலிமுகத்திடலில் அரங்கேற்றியிருக்கின்றார் ரணில்.

அஹிம்சைவழியை இரும்புக்கரம் கொண்டு முப்படைகளின் உதவியுடன் அடக்க முற்படுவது எத்தகைய மிகப் பெரிய அழிவைத் தரும் என்பதை, தனது மாமனார் ஜே.ஆர். மூட்டிய ஆடிக்கலவரத் தீயின் விளைவுகளிலிருந்து அறியாதவர் அல்லர் ரணில். அதே வழியில் அவரும் செல்ல முற்படுவதானது தென்னிலங்கையில் மீண்டும் ஒரு கலவரத்தை தூண்ட முனைகின்றாரா என்ற சந்தேகத்தையும், 1983 ஆம் ஆண்டு கலவரத்தை சாட்டாக வைத்து ஜே.வி.பியை ஜே.ஆர். தடை செய்ததைப் போன்று இப்போதும் எதையாவது ரணில் செய்ய முற்படுகின்றாரா என்ற கேள்வியையும் எழுப்புகின்றது.

### நாளொரு நல்வார்த்தை

"ஜீவராசிகள் அனைத்திடமும் அன்பு செய்யத் துண்டுவதே உண்மையான கல்வி. ஆனந்தம் அளிப்பதும் அதுவே"
- ரஸ்கின்




# போராட்டக்காரர்கள் சட்டவிரோதமாகக் கைது

## உடனடியாக விடுவியுங்கள் என்கிறது மன்னிப்புச் சபை

**கொழும்பு, ஜூலை 23**

**ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுவதற்கான உரிமை மக்களிடமிருந்து பறிக்கப்பட்டுள்ளமை ஏற்றுக்கொள்ள முடியாததாகும் என சர்வதேச மன்னிப்புச்சபை தெரிவித்துள்ளது.**

AMNESTY INTERNATIONAL

சர்வதேச மன்னிப்புச்சபையின் உத்தியோகபூர்வ ருவிற்றர் பக்கத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: இலங்கை அதிகாரிகள் உடனடியாக இந்த வன்முறை நடவடிக்கைகளை கைவிட வேண்டும். சட்டவிரோதமாக கைது செய்யப்பட்டவர்களை உடன் விடுதலை செய்ய வேண்டும். அத்துடன் ஊடக சுதந்திரத்தை பாதுகாக்க வேண்டும். ஊடகவியலாளர்கள் தங்கள் கடமையை செய்வதை தடுப்பது பத்திரிகை சுதந்திரத்தை நேரடியாக மீறும் செயல் - என்றுள்ளது. (ச-இ)

# கைதுசெய்யப்பட்டோரின் பாதுகாப்பை உறுதிசெய்க

## சட்டத்தரணிகள் சங்கம் கோரிக்கை

கொழும்பு, ஜூலை 23

காலிமுகத்திடல் போராட்டக்காரர்கள் மீது படையினரால் தாக்குதல் நடத்தப்பட்டு கைதுசெய்யப்பட்டோரின் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டும் என இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

இதுதொடர்பில் சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் ஜனாதிபதி சட்டத்தரணி சாலிய பீரிஸ் தெரிவித்ததாவது:-

அரசாங்கத்துக்கு எதிராக ஜனாதிபதி செயலகத்துக்கு முன்பாக போராட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்த நிலையில் நேற்று அதிகாலை திடீரென இராணுவத்தினர் குவிக்கப்பட்டு போராட்டத்தில் ஈடுபட்டோர் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

அத்துடன் சட்டத்தரணி ஒருவர் உள்ளிட்ட 10 பேர் வரையில் கைது செய்யப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. கைது செய்யப்பட்ட



அனைவரின் பாதுகாப்பையும் அரசாங்கம் உறுதிசெய்ய வேண்டும்.

இந்தச் செயல் சர்வதேச ரீதியில் இலங்கைக்கு தலைகுனிவை ஏற்படுத்தியுள்ளது- என்றார். (ச-இ)

நாளை
24.07.2022
ஞாயிற்றுக்கிழமை
ஆடி 08
சுபநேரம் : 09.02 - 10.32
ராகுகாலம்: 04.32 - 06.02
ஏகாதசி விரதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**காணி விற்பனைக்கு**

தாவடி மானிப்பாய் வீதி தாவடி வடக்கில் 1 1/2 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.
(தரகர் தேவையில்லை)

(CS 20054) (3/6)

தொடர்பு :077 255 0807

# அகற்றப்பட்டனர் போராட்டக்காரர்!

## பொலிஸார் பெருமிதம்

கொழும்பு, ஜூலை 23

ஜனாதிபதி செயலக நுழைவாயிலுக்கு அருகில் அமைதி வழியில் போராட்டத்தில் ஈடுபட்டு வந்த 'கோத்தா கோ கம' போராட்டக்காரர்கள் நேற்று அதிகாலை அகற்றப்பட்டுள்ளனர் எனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சட்டத்தரணி நிஹால் தல்துவ தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

பொலிஸ், இராணுவம் மற்றும் பொலிஸ் விசேட அதிரடிப்படை அதிகாரிகள் இணைந்து இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளனர்.

இந்த நடவடிக்கைக்கு பல தரப்பும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளன. எனினும் குறித்த பகுதியிலிருந்து போராட்டக்காரர்கள் அகற்றப்பட்டுள்ளனர்- என்றார். (ச-இ)

# ஜனாதிபதி செயலகத்துக்குள் தங்கினரென 9 பேர் கைது!

கொழும்பு, ஜூலை 23

ஜனாதிபதி செயலகத்துக்குள் அனுமதியின்றி தங்கியிருந்தனர் என்ற குற்றச்சாட்டில் 9 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் எனவும் அவர்களில் இருவர் காயமடைந்த நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர் எனவும் பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

நேற்று அதிகாலை முப்படையினரால் கோட்டை பொலிஸ் பிரிவில் அமைந்துள்ள ஜனாதிபதி செயலகம், அதன் பிரதான நுழைவாயில் மற்றும் அலுவலகத்துக்குள் தங்கியிருந்த ஆர்ப்பாட்டக்காரர்களை அகற்ற நடவடிக்கை மேற்கொண்டபோதே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஜனாதிபதி செயலக சோதனை நடவடிக்கைகளுக்காக பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் மற்றும் பொலிஸாரால் அப்பகுதியில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது எனபொலிஸ் ஊடகப்பிரிவு மேலும் தெரிவித்துள்ளது. (ச-இ)

5ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி



தோற்றம்: 14.01.1933 மறைவு : 23.07.2017

**கந்தையா சின்னராசா**

(ஓய்வுபெற்ற தபால் ஊழியர்)

அன்புமொழி பேசி ஆதரவாய் எமக்கிருந்து
இன்பத்தை எமக்களித்த ஈடில்லா எம் அப்பாவே!
எங்கு நீங்கள் சென்றீர் ஏங்கித் தவிக்கின்றோம்

உங்கள் பிரிவால் துயருறும்
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்

(CS 20050) (3/6)

# அதிக விலையில் பெற்றோல் விற்பனை செய்தவர்கள் கைது!



யாழ்ப்பாணம், ஜூலை 23

மானிப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சுதுமலைப் பகுதியில் பெற்றோலைப் பதுக்கி வைத்திருந்து அதிக விலையில் விற்பனை செய்த இருவர் நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்டனர் என்று மானிப்பாய் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சுதுமலை ஐங்கரன் வீதியில் பெற்றோலைக் கறுப்புச் சந்தையில் 3 ஆயிரத்து 700 ரூபாவுக்கு விற்பனை செய்வதாக மானிப்பாய் பொலிஸாருக்குக் கிடைத்த புலனாய்வுத் தகவலின் அடிப்படையில் குறித்த பகுதிக்கு விரைந்த பொலிஸார் இருவரைக் கைது செய்ததுடன் அவர்களிடமிருந்து 10 லீற்றர் பெற்றோலையும் கைப்பற்றினர்.

கைதுசெய்யப்பட்டவர்கள் 22 மற்றும் 36 வயதானவர்கள் என்று தெரிவித்த பொலிஸார் இருவருக்கும் எதிராக மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யவுள்ளனர். (ஒ-14,125)

66ஆவது பிறந்த நாளும் முதலாம் ஆண்டு நினைவும்

தோற்றம் 23 . 07 . 1956



மறைவு 25 . 06 . 2021

திருமதி **இராசலட்சுமி இராசசேகரம்**

அன்பின் உறைவிடமாய் பண்பின் இலக்கணமாய் பார்போற்ற வாழ்ந்தீர்கள்
கண்முன்னே வாழ்ந்த காலம் கானல் நீரானாலும்
எம் கண்முன்னே உங்கள் முகம் எந்நாளும் உயிர்வாழும்.
உண்மையின் உரைகல்லாய் உத்தமியாய் வாழ்ந்த நீங்கள்
சத்தியத்தை மட்டுமே சாஸ்திரமாய் சொன்னீர்கள்
மண்விட்டு மறைந்து நீங்கள் ஓராண்டு ஆனாலும்
எம் கண்விட்டு மறையாமல் கண்ணுக்குள் இருக்கிறீர்கள்
காலங்கள் கடந்தாலும் எம் நெஞ்சோடு
எந்நாளு கலந்திருந்து வாழ்வீர்கள்
ஆறாது எம் துயர் என்றும் அழியாது உம் நினைவு
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய நுணசைக் கந்தனை வேண்டுகின்றோம்.

**குடும்பத்தினர்**
மாதகல் வடக்கு, மாதகல்.

(CS 20046) (3/6)

**மரண அறிவித்தல்**

தோற்றம் 05 . 09 . 1958



மறைவு 19 . 07 . 2022

**கனகரத்தினம் ஸ்ரீரங்கநாதன்**

கோண்டாவில் மேற்கு, இணுவிலைப் பிறப்பிடமாகவும் லண்டனை வதிவிடமாகவும் கொண்ட கனகரத்தினம் (பெயின்ரர்) ஸ்ரீரங்கநாதன் கடந்த (19.07.2022) செவ்வாய்க்கிழமை இலங்கையில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கனகரத்தினம் மற்றும் தவமணி ஆகியோரின் அன்பு மகனும், காலஞ்சென்ற சபாரத்தினம் மற்றும் லட்சுமிப்பிள்ளை ஆகியோரின் மருமகனும், ரதிதேவியின் அன்புக் கணவரும் ஏஞ்சலி, கஜன், ஜெகன் ஆகியோரின் அன்புத் தந்தையும், நவுனித் இன் மாமனாரும் குலசிங்கம் (அஷ்டாங்க யோகி), காலஞ்சென்ற இராஜேஸ்வரி ஆகியோரின் பெறாமகனும், காலஞ்சென்றவர்களான முருகையா, கமலேஸ்வரி (பூமணி) ஆகியோரின் மருமகனும், முரளீதரன், யுகபாலன், சந்தானகோபால், பேரின்பநாயகி, வரதாமணி ஆகியோரின் அன்புச் சகோதரனும், மைதிலி, காலஞ்சென்ற லோகநாயகி, கணேசலிங்கம், உதயதாஸ், ஞானந்தம் - ரஞ்சினி ஆகியோரின் அன்பு மைத்துனரும், சித்திரகலா - சிவானந்தன், விலோஷனி - செல்வசுந்தரா, பிரகாஜினி - திருக்குமரன், கோகுலன், திவாகரன், ஜெனித்தா - கௌதமன், சகானா, சர்வேஸ், ஆனந்தன் ஆகியோரின் பெரிய தந்தையும் ஆர்த்தி, ஆதித்தன் ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற பிரவினி, ஹரீஸ், லக்ஷயா, பானுஜா, கஜலக்ஷன், கிஷானிகா, விதுர்ஜன், திருக்ஷிகா, விகாசன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (24.07.2022) ஞாயிற்றுக்கிழமை மு.ப 10.00 மணியளவில் அன்னாரின் கோண்டாவிலில் அமைந்துள்ள இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

K.K.S Road,
கோண்டாவில்.

021 205 4434

தகவல் :
**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

பிறப்பு 20 . 10 . 1935 — இறப்பு 22 . 07 . 2022



## பொன்னுத்துரை சிவராஜா

ஐயனார்கோயிலடி, வண்ணார்பண்ணையை வசிப்பிடமாகக் கொண்ட பொன்னுத்துரை சிவராஜா அவர்கள் நேற்று (22.07.2022) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை-பொன்னுக்குட்டி தம்பதியரின் அன்பு மகனும், யோகேஸ்வரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான அன்னலட்சுமி, பத்மாவதி மற்றும் சிவயோகம், ராஜேஸ்வரி (துரையம்மா) ஆகியோரின் சகோதரனும், காலஞ்சென்றவர்களான அமிர்த கடேஸ்வரன் (செல்வம் சாமி), தட்சாயினி மற்றும் சசிதரன், முரளீதரன், ஹம்சா, சிவகௌரி, கார்த்தியாஜினி (காஞ்சனா - வண்ணார்பண்ணை, நூலக உத்தியோகத்தர்) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற சிவானந்தன் (ஆனந்தி) மற்றும் சுலோஜனாதேவி (ஆசிரியர், சைவசன்மார்க்கம் ஏழாலை), செல்வராணி (அபிவிருத்தி உத்தியோகத்தர் - நல்லூர்), கிருபாகரன் ஆகியோரின் மாமனாரும், யோகன்யா, துளசிராஜன், லோஹித்ராஜன், யுவேனிஷா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (24.07.2022) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:077 5386271 தகவல்: குடும்பத்தினர்

(CS 45641) 1/6

# மரண அறிவித்தல்

தோற்றம் 12 . 02 . 1955 — மறைவு 20 . 07 . 2022



## பொன்னுத்துரை தேவபாதம்

(ஓய்வுபெற்ற தொழில்நுட்ப உத்தியோகத்தர், மருத்துவ பீடம் - யாழ். பல்கலைக்கழகம்)

மட்டுவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னுத்துரை தேவபாதம் கடந்த (20.07.2022) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னுத்துரை புவனேஸ்வரி தம்பதியரின் அன்பு மகனும், தங்கேஸ்வரியின் (ஓய்வுபெற்ற பிரதி அதிபர் சிறுப்பிட்டி GTMS) அன்புக் கணவரும், கம்ஷிகா (தாதியல் பீடம், கொழும்பு பல்கலைக்கழகம்), சானுகா (கால்நடை வைத்திய பீடம், பேராதனைப் பல்கலைக்கழகம்), சுபஸ்திகா (சாவகச்சேரி இந்துக் கல்லூரி மாணவி) ஆகியோரின் அன்புத் தந்தையும், தேவராணி, திருநாவுக்கரசு (கனடா), சிவலோகநாதன் (கனடா), யோகராணி (அமரர்), சுகிர்தராணி (கனடா), யமுனாராணி (கனடா), ஆனந்தராஜா (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரரும், புவனேஸ்வரி, அரியராஜசிங்கம்(அமரர்), தர்மகுலசிங்கம், ராஜேஸ்வரி (அமரர்), யோகேஸ்வரி (ஜேர்மனி), கமலாதேவி, தியாகலிங்கம் (அமரர்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (24.07.2022) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வேம்பிராய் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்

(CS 20065) 1/6

# மரண அறிவித்தல்

அன்னை மடியில் 09 . 01 . 1953 — ஆண்டவன் திருவடியில் 19 . 07 . 2022



## சிவகுரு புவனேந்திரதாஸ்

யாழ்ப்பாணம் நல்லூர்வடக்கை பிறப்பிடமாகவும் நுணாவில் மேற்கை வசிப்பிடமாகவும் தற்போது பிரான்சில் வசித்தவருமான சிவகுரு புவனேந்திரதாஸ் அவர்கள் 19.07.2022 செவ்வாய்க்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிவகுரு இராசம்மா தம்பதிகளின் அன்பு மகனும் , காலஞ்சென்ற இராமலிங்கம் அன்னபூரணம் தம்பதிகளின் அன்பு மருமகனும், இந்திராணியின் அன்புக் கணவரும், லக்ஷியின் ஆசை அப்பாவும் பராசக்தி, மோகனதாசன், மனோகரதாஸ் ஆகியோரின் அன்புச் சகோதரனும், பத்மநாதன், மொறின், காலஞ்சென்ற நாகேஸ்வரி, காலஞ்சென்ற செல்வராணி, நாகேஸ்வரி, அற்புதராணி, காலஞ்சென்ற புஸ்பராணி, நேசராணி ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் பிரான்சில் கீழ்குறிப்பிட்ட முகவரியில் 26.07.2022 செவ்வாய்கிழமை பிற்பகல் 1 மணியில் இருந்து 2.30 மணிவரை நடைபெறும். இத்தகவலை உற்றார், உறவினர் மற்றும் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகின்றோம்.

Funérarium Municipal
28 Rue de Groslay
95160 MONTMORENCY.
France.

தொலைபேசி இலக்கம்
0777350793.
0778502039 ,
0016479923973

தகவல் : குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்



## மாணிக்கம் இரகுநாதன்

(முன்னாள் நடத்துனர்–இ.போ.ச. சாலை காரைநகர்)

பண்ணாகத்தைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திரு.மாணிக்கம் இரகுநாதன் 22.07.2022 வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற மாணிக்கம் மீனாட்சி தம்பதியரின் கனிஷ்ட புதல்வனும் அமரர் பாக்கியநாதன் (முன்னாள் தபால் அதிபர், பண்ணாகம் உப தபால் கந்தோர்), அமரர் நகுலேஸ்வரி, சீவரத்தினம் ஆகியோரின் அன்பு சகோதரரும், சர்வேஸ்வரியின் பாசமிகு கணவரும், வைத்திய கலாநிதி மணிவர்ணன் (மாவட்ட ஆயுள்வேத ஒருங்கிணைப்பாளரும் மருத்துவ அத்தியட்சகரும், மாவட்ட சித்த மருத்துவமனை நறுவிக்குளம், மன்னார்), ரவிவர்ணன் (வட்டுக்கோட்டை அஞ்சல் அலுவலகம்) ஆகியோரின் அன்புத் தகப்பனும் கலாநிதி, தர்மினி (சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர், பிரதேச செயலகம் சங்கானை) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் பிரசன்னா (மாணவன்.யாழ்.இந்துக் கல்லூரி), மீனாட்சி (மாணவி, யா/பண்ணாகம் மெய்கண்டான் ம.வி) ஆகியோரின் பிரியமான பாட்டனும் ஆவார்.

அன்னாரின் ஈமைக்கிரியைகள் இன்று (23.07.2022) சனிக்கிழமை மு.ப 10.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் திருவடிநிலை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்ந அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பண்ணாகம்.

தொடர்புகளுக்கு:
077 556 1234
077 051 4192

தகவல் :
வைத்தியகலாநிதி
மணிவர்ணன் (மகன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பேக்கரி அங்கத்தவர்களுக்கு எரிபொருள் விநியோகம்

யாழ்.மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கங்களின் அங்கத்தவர்களுக்கு டீசல் அண்மையில் விநியோகிக்கப்பட்டது. இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் ஏற்பாட்டில் லங்கா ஐ.ஓ.சி. எரிபொருள் நிறுவனத்தின் விசேட ஒதுக்கீட்டில் டீசல் வழங்கப்பட்டது. (ஒ-14)


## கண்ணீர் அஞ்சலி

வடமாகாண ஆயுள்வேத மருத்துவர் நலன்புரி மன்றத்தின் உறுப்பினர் **வைத்திய கலாநிதி R.மணிவர்ணன்** அவர்களின் அன்புத் தந்தையார் **மாணிக்கம் இரகுநாதன்** அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

வட மாகாண ஆயுள்வேத மருத்துவர் நலன்புரிமன்றம்

## ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் நன்றி நவிலலும்



கடந்த ஆனிமாதம் 4ஆம் திகதி 04.06.2022 அன்று சிவபதமடைந்த

அமரர்

**ஓங்காரரூபி சண்முகநாதன்**
(செயலாளர், சிவகுரு ஆதீனம்)

அவர்களின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை 692, பருத்தித்துறை வீதி, நல்லூரில் அமைந்துள்ள சிவகுரு ஆதீனத்தில் நாளை (24.07.2022) ஞாயிற்றுக்கிழமை மு.ப 11.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

அப்பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் மறைவுச்செய்தி அறிந்து நேரடியாகவும் தொலைபேசி வாயிலாகவும், மலர் மாலைகள் சாத்தியும் அஞ்சலி செலுத்தி ஆறுதல்களையும் அனுதாபங்களையும் தெரிவித்த உற்றார், உறவினர், அன்பர்கள்,நண்பர்கள் அனைவருக்கும் எமது உளமார்ந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றோம்.

சிவகுரு ஆதீனம்
நல்லூர்.

## மரண அறிவித்தல்

தோற்றம் 20 . 04 . 1932



மறைவு 21 . 07 . 2022

## அமரர் சிவசுப்பிரமணியம் கண்மணி

யாழ்ப்பாணம் வடலியடைப்பை பிறப்பிடமாகவும் சில்லாலையை (யாழ்ப்பாணம்) வதிவிடமாகவும் கொண்ட அமரர் சிவசுப்பிரமணியம் கண்மணி அவர்கள் 21.07.2022 வியாழக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற நாராயணப்பிள்ளை பொன்னுப்பிள்ளை ஆகியோரின் அன்பு மகளும் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை பொன்னம்மா தம்பதிகளின் பாசமிகு மருமகளும் காலஞ்சென்ற சிவசுப்பிரமணியம் (சோமு) அவர்களின் ஆருயிர் மனைவியும் இராமநாதன் (சில்லாலை,வாழைக்குலை தரகர்), வைகுந்தநாதன் (ராசையா, V.S.V ஜயப்பன் அரிசி ஆலை உரிமையாளர்,கனகராயன்குளம்), அமரர் மோகனாம்பிகை, அமரர் சிவநாதன், ஆறுமுகநாதன் (ஜேர்மனி), கோமதி (ஜேர்மனி), உமாதேவி (நெதர்லாந்து), அமரர் சம்பூநாதன் ஆகியோரின் பாசமிகு தாயாரும் முத்தையா, நவரட்ணம், தியாகராஜா, வள்ளியம்மை, நாகேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஸ்ரீ ரஞ்சினி (ஓய்வு பெற்ற ஆரம்ப கல்வி ஆசிரிய ஆலோசகர், யாழ்.கல்வி வலயம்), கிருஷ்ணதேவி, குமுதினி (பாரதி முன்பள்ளி ஆசிரியர், கனகராயன் குளம்), சறோஜினிதேவி, கோணேசலிங்கம், அன்ரனி ஆகியோரின் பாசமிகு மாமியாரும் பேபி, பரமலக்ஸ்மி, விஜயலக்ஸ்மி, செந்தில்வேல், விஜயராஜா ஆகியோரின் மைத்துனியும் அகிர்தன், துசானி, அமரர் திவேகா, மிதுலா, துசாரா, கௌசிகன், சங்கீதா, அமரர் தாரகன், நிசங்கன் (கீர்த்தி), தர்சன், கயாழினி, அஸ்வின், நிதிலன், நிருஜன், அன்டர்சன், லிஒனி, டியோன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், இனியாழ் இன் பாசமிகு பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (24.07.2022) ஞாயிற்றுக்கிழமை பி.ப 01.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பி.ப 2.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக சம்பில்துறை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்: குடும்பத்தினர்.
077 271 8648, 077 481 4734


# திருவடிநிலைப் பகுதியில்
# குற்றச்செயல்களைத் தடுக்க பொலிஸ் நிலையம் அமைக்குக
## வலி. மேற்கு சபையில் தீர்மானம்

**யாழ்ப்பாணம், ஜூலை 23**

**வலி. மேற்குப் பிரதேசசபையின் ஆளுகைக்குட்பட்ட திருவடிநிலைப் பகுதிகளில் சட்டவிரோத நடவடிக்கைகளைத் தடுக்க பொலிஸ் நிலையம் அமைக்குமாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.**

வலிகாமம் மேற்கு பிரதேசசபையின் மாதாந்த அமர்வு நேற்று சபையின் பிரதான மண்டபத்தில் இடம்பெற்றபோது சபையின் உப தவிசாளர் வே. சச்சிதானந்தத்தால் கொண்டுவரப்பட்ட பிரேரணை தீர்மானமாக நிறைவேற்றப்பட்டுள்ளது. பொன்னாலை முதல் திருவடிநிலை சம்பில்துறை வரையான பகுதிகளில் கசிப்பு, கோடா காய்ச்சல் போன்ற சட்டவிரோதச் செயல்கள் அண்மைக்காலமாக அதிகரித்துள்ளன என அப்பகுதி மக்களால் முறைப்பாடுகள் தெரிவிக்கப்படுகின்றது. கடந்த ஒரு மாத காலமாக சவுக்கடி முதல் திருவடிநிலை வரையான பகுதியில் மணல் அகழ்வு இடம்பெற்று சுழிபுரம் மேற்கினூடாக மணல் கடத்தப்படுகின்றது. இந்தச் சட்டவிரோத செயல்களைத் தடுக்க பொலிஸார் ரோந்துப் பணிகளை முன்னெடுக்கின்றார்களா? என்பது கேள்விக்குறியாக உள்ளது. ஆகவே சட்டவிரோதச் செயல்களைத் தடுப்பதற்கு திருவடி நிலைப் பகுதியில் பொலிஸ் நிலையம் அமைக்கப்பட வேண்டும் என சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. (ச-125)

## திருக்கோணேஸ்வரம் இன்று கொடியேற்றம்

திருகோணமலை, ஜூலை 23

தெட்சணகைலாயம் திருக்கோணேஸ்வரர் ஆலய தேவியார் மாதுமை அம்பாள் மஹோற்சவம் இன்று முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறவுள்ள மஹோற்சவத்தில் எதிர்வரும் 31 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தேர்த்திருவிழாவும் ஓகஸ்ட் முதலாம் திகதி திங்கட்கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளன என்று ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (ஒ-14)



## வஜிர அபேவர்தன நாடாளுமன்றத்துக்கு



கொழும்பு, ஜூலை 23

ஐக்கிய தேசியக் கட்சியின் வெற்றிடமான தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் பதவிக்கு அந்தக் கட்சியின் வஜிர அபேவர்தன தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

அதற்கான வர்த்தமானி அறிவிப்பு நேற்று இரவு வெளியிடப்பட்டுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்றுமுன்தினம் ஜனாதிபதியாகப் பதவியேற்றதைத் தொடர்ந்து வெற்றிடமான நாடாளுமன்ற உறுப்பினர் பதவிக்கே இவர் தெரிவு செய்யப்பட்டுள்ளார். (ம)


## ஓராண்டு நினைவுப்பகிர்வும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் மஹேஸ்வரலஹரி நூல் வெளியீடும்



பிலவ வருடம் வைகாசி பூர்வபக்ஷ திரியோதசியில் ஸ்வர்க்கிய ஸ்ரீ ஆகிவிட்ட எங்கள் குடும்பத்தலைவர்
**சிவஸ்ரீ ஐ.மஹேஸ்வரக் குருக்களின்**
ஓராண்டு குறித்து நினைவுப் பகிரலும் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையும் நூல் வெளியீடும் சுதுமலை ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் ஆலய கல்யாண அன்னதான மண்டபத்தில் நாளை (24.07.2022) ஞாயிற்றுக்கிழமை மு.ப 9.30 மணி தொடக்கம் 12.30 மணி வரை நடைபெறும்.தொடர்ந்து மதிய போசன நிகழ்வும் இடம்பெறும்.

### நிகழ்வுகள்

முற்பகல் 9.30 மணிக்கு குருக்கள் ஐயாவின் திருவுருவப்படம் அம்பாள் வாசலிலிருந்து வெளிவீதி வழியாக மண்டபத்தை அடைதல்.

- அகண்ட மோக்ஷ விளக்கேற்றல்
- திருமுறைபாராயணம்
- மஹேஸ்வர லகரி நூல் வெளியீடு
- ஸ்ரீருத்திர வேதபாராயணம்
- அஞ்சலி உரைகள்
- சமாராதனை (மதிய போசனம்)

இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று எமது குடும்பத்தலைவரின் ஆத்மா ஸ்வர்க்க லோக பிராப்தியடைய வேண்டி இந் நிகழ்வில் பங்கு பற்றுமாறும் தங்களை பணிவன்புடன் அழைக்கின்றோம்.

ஸ்ரீபுவனேஸ்வரி அம்மன் கோவில்,
சுதுமலை, மானிப்பாய்.
ஸ்ரீநாகபூஷணி அம்மன் கோவில் நயினாதீவு

ஸ்வர்க்கிய ஸ்ரீ
ஐ.மஹேஸ்வரக் குருக்களின்
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ரணிலின்...

அமைச்சரவை விவரம் :
கல்வி அமைச்சர்- சுசில் பிரேம ஜயந்த , கடற்றொழில் அமைச்சர்- டக்ளஸ் தேவானந்தா, சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சர் -ஹரின் பெர்னாண்டோ, நீதி, அரசமைப்பு மறுசீரமைப்பு மற்றும் சிறைச்சாலை விவகாரங்கள் அமைச்சர்- விஜயதாஸ ராஜபக்ச, விவசாயத்துறை மற்றும் வன உயிரிகள் பாதுகாப்பு அமைச்சர்- மஹிந்த அமரவீர, போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் ஊடகத்துறை அமைச்சர்- பந்துல குணவர்தன, சுகாதாரத்துறை அமைச்சர்- கெஹலிய ரம்புக்வெல, நகர மற்றும் வீடமைப்பு அபிவிருத்தி அமைச்சர் - பிரசன்ன ரணதுங்க, பெருந்தோட்டத்துறை அபிவிருத்தி அமைச்சர்- ரமேஷ் பத்திரண, வெளிவிவகார அமைச்சர்- அலி சப்ரி, புத்தசாசன மற்றும் மத விவகார அமைச்சர் - விதுர விக்கிரமநாயக்க, வலுசக்தி மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் - காஞ்சன விஜேசேகர, சுற்றாடல்துறை அமைச்சர்- நஸீர் அஹமட், வர்த்தகம் மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சர் - நளின் பெர்னாண்டோ, பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர்- டிலான் அலஸ், உள்ளூராட்சி மற்றும் அரச நிர்வாக அமைச்சர்- பிரதமர் தினேஷ் குணவர்தன, வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கள் மற்றும் தொழில் அமைச்சர் - மனுஷ நாணயக்கார, விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் - ரொஹான் ரணசிங்க.

கோத்தாபய ராஜபக்ச, ஜனாதிபதிப் பதவியில் இருந்து விலகியதை அடுத்து, நாட்டை மீட்டெடுப்பதற்கு இதயபூர்வமான சர்வகட்சி அரசாங்கம் அமைக்கப்படவேண்டும் என்று இலங்கைக்கு உதவி வழங்கும் தரப்புகளும், பொது மக்களும், எதிர்க்கட்சிகளும், சிவில் சமூகச் செயற்பாட்டாளர்களும், மதத் தலைவர்களும் மீண்டும் மீண்டும் வலியுறுத்தியிருந்த போதிலும், இந்தக் கோரிக்கைகள் எவையும் புதிய அமைச்சரவை நியமனத்தில் செவிசாய்க்கப்படவில்லை. எதிர்பார்க்கப்பட்ட மாற்றங்கள் எவையும் இல்லாமலேயே அமைச்சரவை அமைக்கப்பட்டுள்ளதுடன், தோல்விகண்ட திட்டங்கள் ஏதுமற்ற ஸ்ரபழைய முகங்களுக்கே மீண்டும் இடம் வழங்கப்பட்டுள்ளது. இதனால் அமைச்சரவை நியமனத்தை பலரும் விமர்சித்து வருகின்றனர். (அ-ம)

## கிணற்றுக்குள்...

செட்டி இலட்சுமணன் என்ற முதியவரே இவ்வாறு உயிரிழந்தார். சுயநினைவு இல்லாத நிலையில், மருத்துவமனைக்குக் கொண்டுசெல்லப்பட்ட அந்த முதியவரைப் பரிசோதித்த மருத்துவர்கள், அவர் ஏற்கனவே உயிரிழந்துவிட்டார் என்று தெரிவித்துள்ளனர். இறப்புத் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டனர்.
(அ-ம-9)

## சுழிபுரம்...

நேற்றுத் திடீரென புகைமண்டலம் எழுந்துள்ளது. இதை சுழிபுரம் மேற்கு ஐயனார் கோவில் பகுதியைச் சேர்ந்த இளைஞர்கள் அவதானித்துள்ளனர். இதையடுத்து, அவர்கள் இது தொடர்பில் வலி. மேற்கு பிரதேசசபையிடம் அறிவித்துவிட்டு சம்பவ இடத்துக்குச் சென்றபோது அங்கு சுமார் 2 ஏக்கருக்கும் மேற்பட்ட தரவை நிலமும் காட்டுப் பகுதியும் எரிந்தழிந்திருந்தன. அருகில் உள்ள கிணற்றில் இருந்து தண்ணீர் பெற்று தீயை அணைக்கும் முயற்சியிலும் இளைஞர்கள் ஈடுபட்டனர். இது தொடர்பில் வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்திலும் முறைப்பாடு வழங்கப்பட்டது. (அ-ம-125)

## மர்மப்பொருள்...

குறித்த கண்ணிவெடியகற்றும் நிறுவனத்தினரால் மீட்கப்படும் வெடிபொருள் பாதுகாப்பாக பேணப்படும் பகுதியில் இருந்த மர்மப்பொருளொன்றை குறித்த காவலாளி , கையாள முற்பட்ட போது அது திடீரென வெடித்துள்ளது. இதனால் காயமடைந்த குறித்த காவலாளி முதலுதவிகளின் பின்னர், யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டார். இது தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-ம-9)

## வாகன...

அரசாங்கத்தால் வாகன இலக்கங்களின் இறுதி இலக்கத்துக்கு அமைய குறிப்பிட்ட தினங்கள் ஒதுக்கிக் கொடுக்கப்பட்டு, அந்தத் தினங்களில் குறித்த வாகனங்களுக்கு எரிபொருள் விநியோகிக்க ஏற்பாடு செய்யப்பட்டது. இந்த நடைமுறை நேற்றுமுன்தினம் முதல் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.
இவ்வாறிருக்கையில், எரிபொருள் பெறுவதற்காக சிலர் தமது வாகனங்களில் போலி இலக்கங்களை பொருத்தி எரிபொருள் மோசடியில் ஈடுபட்டுள்ளனர். இந்த நிலையில், இவ்வாறான மோசடியில் எவராவது ஈடுபட்டால் அவர்களுக்கு 20 ஆயிரம் ரூபா தண்டம் அல்லது 3 மாதங்கள் சிறைத்தண்டனை விதிக்கப்படும் என்று பொலிஸார் அறிவித்துள்ளனர். இதே குற்றத்தை ஒருநபர் இரண்டாவது தடவையாக மேற்கொண்டால் அவருக்கு 30 ஆயிரம் ரூபா தொடக்கம் 50 ஆயிரம் ரூபா வரையிலான தண்டமும், மூன்று மாதங்களுக்குக் குறையாத சிறைத்தண்டனையும் விதிக்கப்படலாம் என்றும் பொலிஸார் எச்சரித்துள்ளனர். (அ-ம-14)

## காலிமுகத்திடல்...

தாக்குதலை நடத்தின. சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் மற்றும் பொது மக்கள் பலர் இந்தத் தாக்குதலில் காயமடைந்தனர். இந்த நிலையிலேயே அரசாங்கத்தின் இந்த அராஜகத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்றையதினம் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.
(அ-ம-14)

## ராஜபக்ச...

வரான சஜித் பிரேமதாஸ.
இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் உள்ளதாவது:-
ராஜபக்ச நிழல் அரசாங்கம் இந்த நாட்டின் நிராயுதபாணியான மக்கள் மீது கொடூரமான முறையில் தாக்குதல் நடத்தியுள்ளது. புதிய ஜனாதிபதி நியமிக்கப்பட்டவுடன் ஆரம்பிக்கப்பட்ட இந்தத்தாக்குதல் அரசாங்கம் செல்ல முற்படும் பயணப்பாதை எது என்பதை நன்கு உணர்த்துகின்றது.
இந்தத்தாக்குதலுக்கான பொறுப்பிலிருந்து ஜனாதிபதி தப்ப முடியாது. தாக்குதலுக்கு உத்தரவு பிறப்பித்தது யார்? திட்டமிட்டது யார்? தாக்குதலை நடத்தியது யார்? என்பன குறித்து முறையான விசாரணை நடத்தப்பட வேண்டும் என்றார். (அ-ம)

## மண்ணெண்ணெய்...

காலமாக விநியோகிப்படவில்லை. இதனால் கடற்றொழிலாளர்களும், விவசாயிகளும் தமது வாழ்வாதாரத்தை இழக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது. எனவே துரிதகதியில் வடமாகாணத்துக்கு பெற்றோல், டீசல் என்பவற்றோடு மண்ணெண்ணெயையும் சீராக விநியோகிக்கவேண்டும்- இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளது வடமாகாண எரிபொருள் நிரப்புநிலைய உரிமையாளர் சங்கம்.
பெற்றோலியக் கூட்டுத்தாபன அதிகாரிகளுக்கும் வடமாகாண எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர் சங்கத்தினருக்கும் இடையிலான சந்திப்பு நேற்று இடம்பெற்றது. இதன்போதே மேற்படி கோரிக்கையை எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர் சங்கத்தினர் முன்வைத்தனர். மண்ணெண்ணெய் விநியோகம் வடக்கில் முற்றாகத் துண்டிக்கப்பட்டுள்ளதால் விவசாயிகளும் மீனவர்களும் பெரிதாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்த இரு தரப்பினரும் வாழ்வாதாரம் கேள்விக்குறி ஆகியுள்ளது. இதனால் பல குடும்பங்கள் வறுமைக்குத் தள்ளப்பட்டுள்ளன. எனவே நிலைமையில் தீவிரத்தை உணர்ந்து, பெற்றோல், டீசல் என்பவற்றைப் போன்று மண்ணெண்ணெய் விநியோகத்தையும் துரிதகதியில் சீர்படுத்தித் தரவேண்டும் என்று பெற்றோலியக் கூட்டுத்தாபன தலைமையக அதிகாரிகளிடம் வடக்கு மாகாண எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். இந்தக் கோரிக்கையை சாதகமாகப் பரிசீலித்து விரைவில் நல்லதொரு தீர்வு தரப்படும் என்று பெற்றோலியக் கூட்டுத்தாபன அதிகாரிகள் உறுதியளித்துள்ளனர்.
(அ-ம)

## அரச...

காலிமுகத்திடலில் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள், நேற்றுமுன்தினம் பின்னிரவு அரச படைகளால் கடுமையாகத் தாக்கப்பட்டும், அடித்து விரட்டப்பட்டும் உள்ளனர். அரசாங்கத்தின் இந்த அராஜகத்தைக் கண்டித்தே யாழ்ப்பாணம் மத்திய பேருந்து நிலையத்தில் இன்று பிற்பகல் ஒரு மணியளவில் மக்கள் விடுதலை முன்னணியினரால் கண்டன ஆர்ப்பாட்டம் மேற்கொள்ளப்படவுள்ளது.
யாழ்ப்பாணம் ஊடக அமையத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில், தமிழர் சமூக ஜனநாயக கட்சியின் தலைவர் மின்சார சேவைச் சங்கத்தின் வடமாகாண இணைப்பாளர் க. இளங்குமரன், நல்லூர் சோஷலிஸ இளைஞர் சங்க அமைப்பாளர் கே. சரவணன், பருத்தித்துறை சோஷலிஸ இளைஞர் சங்க அமைப்பாளர் ச. கணேசரூபன் ஆகியோர் கலந்து கொண்டனர்.
(அ-ம-20)

## எரிபொருள்...

வேலணை- புளியங்குளம் பகுதியைச் சேர்ந்த நடராசா பிரேம்குமார் (வயது 48) என்ற நபரே உயிரிழந்தார். மயங்கிச் சரிந்த அவர் உடனடியாக மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட போதிலும் சிகிச்சை பயனளிக்காது உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இறப்புத் தொடர்பான விசாரணைகளை ஊர்காவற்றுறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ-ம-23)

## ரணிலை...

வில்லை. இலங்கையில் ஆட்சிமாற்றங்கள் ஏற்படுகின்ற போது அமெரிக்கா மற்றும் இந்தியாவின் தலைவர்கள் புதிதாகப் பதவியேற்றவருக்கு அல்லது ஆட்சியமர்த்தக்கவைப்பவருக்கு வாழ்த்துத் தெரிவிப்பது வழமை. ஆனால், ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாகப் பொறுப்பேற்றமைக்கு அமெரிக்க ஜனாதிபதி பைடனோ அல்லது இந்தியப் பிரதமர் மோடியோ தமது சமூக வலைத்தளங்களிலோ அல்லது தொலைபேசி ஊடாகவோ வாழ்த்துக்கள் எதையும் தெரிவிக்கவில்லை. சீன ஜனாதிபதி ஜின் பிங் மட்டும் ரணிலுக்கு வாழ்த்துத் தெரிவித்துள்ளதுடன், இலங்கையுடன் நெருங்கிப் பணியாற்றத் தயார் என்று தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

---

காலிமுகத்திடல் போராட்டம்

# கைதான 9 பேருக்கும் நீதிமன்றத்தால் பிணை

கொழும்பு, ஜூலை 23
கொழும்பு காலிமுகத்திடலில் அரச படைகள் மேற்கொண்ட அராஜக நடவடிக்கையின்போது கைதுசெய்யப்பட்ட சட்டத்தரணி நுவான் போபகே உள்ளிட்ட போராட்டக்காரர்கள் 9 பேரும் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.
கொழும்பு கோட்டை நீதிவான் நீதிமன்றத்தால் நேற்று மாலை இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (ம-22)

# மிலேச்சத்தனத் தாக்குதலுக்கு வன்மையான கண்டனங்கள்

*மக்கள் முன்னணி தெரிவிப்பு*

யாழ்ப்பாணம், ஜூலை 23
காலி முகத்திடலில் ஜனநாயக வழியில் போராடிய போராட்டக்காரர்கள் மீதும் அங்கு பிரசன்னமாகியிருந்த ஊடகவியலாளர்கள் மீதும் அரச இயந்திரத்தால் மேற்கொள்ளப்பட்ட மிலேச்சத்தனமான தாக்குதலை மிக வன்மையாகக் கண்டிக்கின்றோம் என்று தெரிவித்துள்ளது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி.
இது தொடர்பில் அந்தக் கட்சியின் பேச்சாளரும் சட்டத்தரணியுமான க. சுகாஷ் அனுப்பிவைத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் உள்ளதாவது:
இந்தப் போராட்டத்தில் தமிழ் மக்களின் அபிலாஷைகள் பிரதிபலிக்கப்படாவிட்டாலும் சகோதர சிங்கள தேசத்தின் நலன்களை உறுதிப்படுத்துவதற்காக முன்னெடுக்கப்படுகின்ற போராட்டம் என்ற ரீதியில், அங்கே மேற்கொள்ளப்படுகின்ற சர்வாதிகாரத்தையும் அராஜகத்தையும் தமிழ்த் தேசத்தின் விடுதலைக்காகச் செயற்படுகின்ற நாங்கள் கண்மூடி மௌனிகளாகப் பேசா மடந்தைகளாகப் பார்த்துக்கொண்டிருப்பது தமிழினத்தின் அரசியற் பண்பாட்டுக்கு முரணானது!
இந்தத் தாக்குதல் புதிதாகப் பதவியேற்ற அரச நிர்வாகத்தின் எதிர்காலச் செயற்பாடுகள் எவ்வாறு அமையப்போகின்றன என்பதைத் துலாம்பரமாகக் காட்டிநிற்கின்றது.
ஜனநாயகப் போராட்டங்களை ஆயுதத்தால் அடக்க முற்படுவது அராஜகத்தின் உச்சக்கட்டம். பேனாமுனை கொண்டு செயற்படும் ஜனநாயகத்தின் நான்காவது தூணாக வர்ணிக்கப்படும் ஊடகத்துறையை நசுக்கி அடக்க முற்படுவது கோழைத்தனத்தினதும் முட்டாள்தனத்தினதும் அதியுச்சமாகப் பார்க்கப்படவேண்டியது. ஜனநாயக விழுமியங்களின் மீது தொடுக்கப்படும் எத்தகைய அச்சுறுத்தல்களுக்கும் எதிராக என்றும் எங்கள் குரல்கள் ஓங்கி ஒலிக்கும். அரச இயந்திரத்தினதும் இராணுவத்தினதும் தாக்குதல்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்கும் ஊடக உறவுகளுக்கும் எமது ஆதரவை வெளிப்படுத்தி நிற்கின்றோம்- என்றுள்ளது. (அ-ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடாளுமன்றத் தேர்தல் நடத்தும்வரையில் மக்களின் போராட்டங்கள் முடிவுக்கு வராது

## ஜே.வி.பி. கூறுகின்றது

**கொழும்பு, ஜூலை 23**

**ராஜபக்சக்களின் வேலைத்திட்டத்தைக் கையில் எடுத்தே போராட்டக்காரர்களை, இராணுவ பலம் கொண்டு புதிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அடக்க முற்படுகிறார். மக்களால் நிராகரிக்கப்பட்ட நாடாளுமன்றத்தை உடனடியாக கலைத்து பொதுத் தேர்தலொன்றுக்கு செல்லும்வரை மக்கள் போராட்டம் தொடரும். இவ்வாறு ஜே.வி.பியின் பொதுச் செயலர் ரில்வின் சில்வா தெரிவித்தார்.**

கொழும்பில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின்போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அச்சுறுத்தல்களை மேற்கொண்டு மக்களை கட்டுப்படுத்தவே ரணில் விக்கிரம சிங்கவும், ராஜபக்சவினரும் தற்போது முற்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், அடக்குமுறைகளால் மக்களைக் கட்டுப்படுத்த முடியாது என்பதை அவர்கள் புரிந்து கொள்ளவேண்டும்.

மக்கள் எதிர்ப்பை இவர் இன்னமும் புரிந்து கொள்ளவில்லை. 5 வருடங்களுக்கு நியமிக்கப்பட்ட ஜனாதிபதியை 2 வருடங்களிலேயே மக்கள் விரட்டியடித்துள்ளார்கள். இந்த நிலைமை எல்லாம் புதிய ஜனாதிபதிக்கு புரியவில்லை என்றே தெரிகிறது. இராணுவத்தைக் கொண்டு மக்களை அடக்கிவிட முடியாது. அவ்வாறான அடக்குமுறை களுக்கு நாம் என்றும் இடமளிக்கவும் போவதில்லை.

ஜனாதிபதி மட்டுமன்றி, ஒட்டுமொத்த நாடாளுமன்றமும் மக்களால் நிராகரி க்கப்பட்டதாகும். எனவே, உடனடியாக நாடாளுமன்றத்தை கலைத்து, மீண்டும் பொதுத் தேர்தலொன்றுக்கு செல்ல வேண்டும். அவ்வாறு இடம்பெற்றால் மட்டுமே நாட்டை மீட்டெடுக்க முடியும். அதுவரை இந்தப் போராட்டமும் தொடரும் - என்றார். (ஒ-இ)


### காணி விற்பனைக்கு

யாழ். இந்துக்கல்லூரி அருகில் பிரப்பன் குளம் வீதியில் 2 பரப்பு 2 குளி காணி விற்பனைக்கு உண்டு

077 229 0303, 070 629 0303

### வேலை வாய்ப்புக்கள்

சாரதி, Data Entry (50,000/-+) Online, Part time Job

077 773 3368, 074 138 3368

### Win Repair

உங்கள் குளிர்சாதனப் பெட்டி, வாசிங் மிஷின், A/C என்பன பழுதடைந்து விட்டனவா? உங்கள் இடத்திற்கே வந்து சிறந்த முறையில் செய்து கொடுக்கின்றோம்.

தொடர்புகளுக்கு: 077 964 8942

### வீடு விற்பனைக்கு

திருநெல்வேலி அம்மாச்சி உணவகத்திற்கு அண்மையில் மாபிள் பதித்த சகல வசதியும் கொண்ட வடக்கு வாசல் வீடு விறப்பனைக்கு உண்டு.

077 082 1010, 077 441 0919

### காணி விற்பனைக்கு

யாழ் நாவற்குழியில் 81 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு

- A.09 பிரதான வீதி முகப்புடனும் மற்றும் 20 அடி பாதையுடன் பின் பக்கமாகவும்
- நாவற்குழி சந்தியில் இருந்து 500 m தூரத்தில்
- மூன்று பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- A.09 வீதியில் இருந்து 200 m தூரத்தில் 20 அடி பாதையுடன் அமைந்துள்ள காணி ஒரு பரப்பின் விலை நான்கு லட்சம் (400000/-)
- இயற்கை சூழலுடன் வியாபார நிலையங்கள், களஞ்சியசாலைகள், மண்டபங்கள், வீடுகள் அமைப்பதற்கு உகந்த சூழல்

பார்வை இடும் நேரம்
காலை 8 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை

தொடர்புகளுக்கு
076 490 5403, 076 491 2493,076 490 6029

### PROCUREMENT NOTICE
### STATE MINISTRY OF EDUCATION

SLGTI

**Sri Lanka German Training Institute – kilinochchi**
**Invitation for Bids (IFB)**

The Chairman Department Procurement Committee on behalf of Sri Lanka German Training Institute (SLGTI) now invites sealed bids from eligible and qualified bidders for Security service, RO Plant and Air condition maintenance service at SLGTI – Kilinochchi.

01.

| Description | Non-Refundable fee |
|---|---|
| 1. Air Condition maintenance service | Rs:- 1000/- |
| 2. RO Plant Maintenance service | Rs:- 1000/- |
| 3. Security Service | Rs:-1000/- |

02. Bidding will be conducted through National Competitive Bidding (NCB) method.
03. The Bidders having similar experience in supply of above service for at least five years shall be eligible to apply.
04. Interested eligible bidders may obtain further information from the office of the Accountant, Sri Lanka German Training Institute (SLGTI), Ariviyal Nagar, Kilinochchi, and inspect the bidding documents at the address given above from 25/07/2022 up to 24/08/2022 during 09:00 hrs on to 15:00 hrs on working days. Tel: 021/2060137, Fax: 021-2060138.
05. Qualification requirements are included in the Bidding Documents.
06. A complete set of Bidding Documents in English language for each tender may be purchased by interested Bidders on submission of a written application to Accountant, Sri Lanka German Training Institute (SLGTI), Ariviyal Nagar, Kilinochchi from 25/07/2022 up to 24/08/2022 during 09:00 hrs on to 15:00 hrs on working days upon payment of a non-Refundable fee.
07. Sealed Bids for each tender shall be delivered separately in ORIGINAL and COPY address to the Chairman Department Procurement Committee, Sri Lanka German Training Institute (SLGTI), Ariviyal Nagar, Kilinochchi on or before 3.00pm on 24/08/2022. Bids will be opened soon after the closing in the presence of the bidder/bidders' representatives who choose to attend. Late Bids will be rejected and not accepted.
08. The Bids shall be valid until 31/10/2022.
09. Procurement Committee has the right to reject all the bids, part of the bids or cancel the entire tender. Further, they reserve all the rights with respect to the procurement.
10. All bids shall be accompanied by a Bid security of 5% of the bid value excluded taxes.

**Director/Principal,**
**Sri Lanka German Training Institute (SLGTI),**
**Ariviyal Nagar,**
**Kilinochchi**

(CR 36658) (3/6)

### காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணத்தில் இருந்து ஊர்காவற்றுறை செல்லும் பிரதான வீதியில்**

**37 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.**
**(நிலப்பரப்பு)**

- யாழ். நகரத்தில் இருந்து 4 KM தூரத்தில் அமைந்துள்ளது.
- 18 அடி பாதையுடன் 3 பரப்பாகவும் 2 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- நல்ல தண்ணீர் ஊற்றுச் சூழல்.
- வீடுகள் அமைப்பதற்கும் களஞ்சியசாலைகள் அமைப்பதற்கும் மற்றும் அனைத்து விதமான தேவைகளுக்கும் உகந்த இடம்.




தரகர் தேவையில்லை

பார்வையிடும் நேரம்:
**காலை 6 மணிமுதல் மாலை 6 மணிவரை**

ஜெயம்: 077 814 7389
077 241 7589


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 23.07.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.